# பாராளுமன்ற செய்தி

செய்தி மடல்
10வது தொகுதி
ஏப்ரல் 2021




01 தியவண்ணா ஓய நீர் மாசடைந்தமை, நிறம் மாற்றமடைந்தமை குறித்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்க செயலணி

03 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் சிலவற்றுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அங்கீகாரம்

16 மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடையில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரத்துக்கு வருடாந்தம் ஏற்படுகின்ற நஷ்டம் 20 பில்லியன் ரூபா

17 செங்கோலுக்கான பொறுப்பை வகிக்கும் படைக்கல சேவிதர்



தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்



# தியவண்ணா ஓய நீர் மாசடைந்தமை, நிறம் மாற்றமடைந்தமை குறித்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்க செயலணி

**தியவண்ணா ஓய நீர் மாசமடைந்தமை, நிறம் மாற்றமடைந்தமை தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு செயலணியை அமைத்து, இதுபற்றி எழுத்துமூலம் தனக்கு அறிவிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்ஹவுக்குத் தெரிவித்தார்.**

தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு நேரடியான தீர்வைக் கண்டுபிடித்தல், அதனை விரைந்து நடைமுறைப்படுத்தல், குறித்த நீரை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர எதிர்கொண்டுள்ள சிரமங்கள் மீண்டும் ஏற்படாதிருப்பதன் அவசியம் குறித்தும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

தியவண்ணா ஓய நீர் மாசடைந்தமை, நிறம் மாற்றமடைந்தமை தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் கௌரவ சபாநாயகர் தலைமையில் கடந்த 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இது பற்றி சுட்டிக்காட்டப்பட்டது.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக உள்ளிட்ட அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்பரவு ஏற்பாடுகள் இராஜாங்க அமைச்சு, இலங்கை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை நனோ தொழில்நுட்ப நிலையம், கட்டட ஆராய்ச்சி நிறுவகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கோட்டை மாநகரசபை, கடுவலை மாநகரசபை, தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவரமைப்பு, இலங்கை பொலிஸ் ஆகின இக்கூட்டத்தில் கலந்துகொண்டன.

இக்கூட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கமளித்த பாராளுமன்ற செயலாளர் நாயகம், தியவண்ணா ஓயாவின் தற்போதைய நிலைமையால் ஏற்பட்டுள்ள பிரச்சினையான சூழல் மற்றும் அந்நிலைமையை மாற்ற வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார். அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் வீட்டுத் தொகுதிகள், தொழிற்சாலைகள், வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றினால் வெளியேற்றப்படுபவை உரிய முறையில் சுத்தம் செய்யப்பட்டு இவற்றில் கலக்கப்படுகின்றனவா என்பது தொடர்பில் அடிக்கடி பரிசோதனை செய்ய வேண்டிய தேவையையும் அவர் தெரிவித்தார்.

சட்டவிரோத குடியிருப்பாளர்களினால் வெளியேற்றப்படும் கழிவுநீரினால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம், தியவண்ணா ஓயாவின் நீரின் தரத்தை உறுதிப்படுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்ஹ வலியுறுத்தினார்.

தியவண்ணா ஓயாவின் நீரை உரிய தரத்தில் பேணுவதற்கு சகல தரப்பினரும் பொறுப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நடைமுறை ரீதியான ஒத்துழைப்பு, நிபுணத்துவ ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

செய்தி

# கௌரவ அஜித் குமார மான்னப்பெரும பாராளுமன்ற உறுப்பினராக உறுதியுரை



**கம்பஹா தேர்தல் மாவட்டத்தின், கௌரவ அஜித் குமார மான்னப்பெரும கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக பதவிச்சத்தியம் செய்துகொண்டார். அதனை அடுத்து அவர் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 05 இன் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகம் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான புத்தகத்தில் கையொப்பமிட்டார்.**

ரஞ்சன் ராமநாயக்க அவர்களின் பாராளுமன்ற உறுப்பாண்மை இரத்தானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு மான்னப்பெரும அவர்களை நியமிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது. பாராளுமன்ற உறுப்பினராக அவரது பெயர் குறிப்பிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

2002 - 2009 காலப்பகுதியில் கம்பஹா நகர சபையின் தலைவராக கடமையாற்றிய அவர் 2009 - 2013 காலத்தில் மேல் மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்தினார். 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக பாராளுமன்றத்துக்கு அவர் தெரிவானார். 2020 ஆம் ஆண்டில் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஊடாக கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் 05 வது இடத்தை பெற்றார். கம்பஹா புனித சிலுவை கல்லூரி, பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கல்வி கற்ற அவர் மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பட்டத்தை பெற்றுள்ளார்.



செய்தி

# இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் சிலவற்றுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அங்கீகாரம்

**இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் சிலவற்றுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியது. இதற்கமைய, இந்நாட்டின் தொழில்துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் கோரிக்கைக்கு அமைய பற்றிக் (Bathik) தவிர்ந்த ஏனைய சாரிகளை இறக்குமதி செய்வதற்கு இடமளிக்கும் ஒழுங்குவிதிக்கும் அரசாங்க நிதி பற்றிய குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

அத்துடன், 2021 பெப்ரவரி மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் 180 நாட்கள் கடன் வசதியின் கீழ் குளியல் அறை சுகாதாரப் பாவனை உபகரணங்கள் போஸிலின் அல்லது மண்ணாலான சுகாதார பாவனைப் பொருட்களை இறக்குமதிசெய்ய உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு அனுமதி கிடைக்கிறது.
கொவிட் சூழ்நிலையின் மத்தியில் நாணயப் பொறுமதி வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கும், அந்நியச் செலாவணியைப் பாதுகாப்பதற்கும் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள போதும், சில பொருட்கள் நுகர்வுக்காக உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி போதுமானதாக இல்லை என்பதன் அடிப்படையில் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் தமயந்தி கருணாரத்னவினால் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் சிலவும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, தரை ஓடு இறக்குமதி தொடர்பில் இந்நாட்டில் உள்ள மூன்று நிறுவனங்கள் மத்தியிலேயே சந்தை காணப்படுகிறது என்றார். இது தொடர்பில் கவனம்செலுத்துவதாக அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். ஊடகங்களில்



அறிக்கையிடப்படுவதுபோன்று ஏதாவது ஒரு நிறுவனம் உற்பத்திச் செலவுக்கு அப்பால் அதிக இலாபத்தை ஈட்டுகின்றதாயின் அது தொடர்பில் கவனம் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டங்களை வகுப்பது வர்த்தக அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சுடன் மட்டுப்படுத்தப்படாது சந்தை தொடர்பில் அறிவைக் கொண்டுள்ள தரப்பினரின் ஒத்துழைப்பையும் பெற்று நடவடிக்கை எடுப்பதன் அவசியத்தை குழுவின் தலைவர் மீண்டும் வலியுறுத்தினார். அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர் கௌரவ நளின் பெர்னாந்து கருத்துத் தெரிவிக்கையில், கொவிட்-19 இயல்பாக்க நிலையின் கீழ் உற்பத்தி மற்றும் விநியோகம் போன்ற பிரச்சினைகள் குறித்து அதிகாரிகள் முடிவு எடுப்பது அவசியமானதாக இருந்தாலும், இதன் பலன் நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகிறதா, இவர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கை சந்தையில் காணப்படும் உண்மையான நிலைமையை அடிப்படையாகக் கொண்டவையா என்பது குறித்து மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டே தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதேநேரம், இலங்கை மத்திய வங்கியினால் அந்நியச் செலாவணிச் சட்டத்தின் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக ஆய்வின் பின்னர் முன்வைக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் குறித்தும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டது.



இதுபோன்ற நடவடிக்கைகளை இன்னும் விவேகத்துடன், குறிப்பாக மூலதன பரிவரித்தனைகளைக் கையாள்வதில் அந்நியச் செலாவணிக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தவிர்க்க வேண்டும் என இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கலாநிதி ஹர்ஷ.டி சில்வா அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் அதன் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா , இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக, பாராளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, கலாநிதி ஹர்ஷ.டி.சில்வா, நளின் பெர்னாந்து உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி

# ‘பட்டிக்களோ கம்பஸ்’ நிறுவனத்தை அரசாங்கத்துக்குச் சொந்தமாக்குவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது - கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

**‘பட்டிக்களோ கம்பஸ்’ நிறுவனத்தை அரசாங்கத்துக்குச் சொந்தமாக்குவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி காவிந்த ஜயவர்த்தன வாய்மூல விடைக்காக முன்வைத்த கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், குறித்த நிறுவனத்துக்குப் பட்டத்தை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்படவில்லையென்றார்.**

பட்டிக்களோ கம்பஸ் நிறுவனத்திடம் பெறுமதியான வளங்கள் காணப்படுவதாகவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கூட அந்தளவு வளங்கள் இல்லையென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். கடந்த வருடங்களில் பல்கலைக்கழகங்களுக்கு 30000 பேர் உள்ளீர்க்கப்பட்டதாகவும், இவ்வருடம் 41500 பேரை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பட்டிக்களோ கம்பஸ் நிறுவனம் குறித்து இரு மாற்றுத் தெரிவுகள் இருப்பதாகவும், முதலாவது தெரிவு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பீடமாக மாற்றுவது என்றும் குறிப்பிட்டார்.

மற்றையது, குறித்த நிறுவனத்தை அரசாங்கப் பல்கலைக்கழகமாக நடத்திச் செல்வது என்றும் அவர் குறிப்பிட்டார். கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்திற்கு 100 மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டிருப்பது சாதகமானது என்றும், குறித்த பல்கலைக்கழகத்துக்கு வசதிகளைப் பெற்றுக் கொள்வது அவசியமானது என்றும் கூறினார்.





# பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழு முதல் தடவையாகக் கூடியது

**பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளுக்கு எதிரான பரிந்துரைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்றக் குழு அண்மையில் முதல் தடவையாகக் கூடியது.**

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே தலைமையில் இக்குழு கூடியது.

இலங்கையில் உள்ள பெண்களை பெரிதும் பாதித்திருக்கும் நுண்கடன் நிதி நிறுவனங்களால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து இக்குழு கவனம் செலுத்தியது. இலங்கையில் நுண்கடன் நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரசபையொன்று விரைவில் அமைப்பது தொடர்பான யோசனை அமைச்சரவைக்கு விரைவில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.



இந்த விசேட குழுவின் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதற்கமைய பணியிட வன்முறை உட்பட பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் குறைகளை விசாரிப்பதே இக்குழுவின் முதன்மையான பணியாகும் என்பது இங்கு தீர்மானிக்கப்பட்டது.

பாலின சமத்துவத்தை நிறுவுகையில் தொடர்புடைய சட்டங்களை ஆராய்ந்து மதிப்பாய்வு செய்வது, பாலின சமத்துவத்தை ஸ்தாபிப்பதற்கான திட்டங்களை வகுத்தல் மற்றும் அவற்றுக்கான நிதி ஒத்துழைப்புக்களை வழங்குவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் அதிகாரிகளையும் இந்தக் குழு ஊக்குவிக்கும்.
தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் முடிவெடுக்கும் அமைப்புகளிலும், அரச, சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையிலும் அதிக பெண்கள் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதிலும் இந்தக் குழு பங்களிக்கவுள்ளது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹினி கவிரத்ன, கலாநிதி ஹரினி அமரசூரிய, எம். உதயகுமார், எஸ்.சிறிதரன், ரோஹன பண்டார மற்றும் பாராளுமன்ற பிரதி செயலாளரும், பணியாட்தொகுதி பிரதானியுமான குஷானி ரோஹனதீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ஐந்து அமைச்சுக்களின் செயலாளர்கள், இரு வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி



**பாராளுமன்றத்தில் நடைபெற்ற உயர் பதவிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் ஐந்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இரு வெளிநாட்டுத் தூதுவர்களின் நியமனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக தெரிவித்தார்.**

சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற உயர் பதவிகள் பற்றிய குழுவிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டது.
நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜகத் அல்விஸ் ஆகியோருக்கு இதன்போது அனுமதி வழங்கப்பட்டது.
அத்துடன், வர்த்தக அமைச்சின் செயலாளர் ஜே.எம். பீ.ஜயவர்தன மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க ஆகியோருக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இதனை விடவும், சவுதி அரேபியாவுக்கான புதிய இலங்கைத் தூதுவராக பீ.எம்.அம்ஸாவை நியமிக்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு எடுத்துள்ள தீர்மானத்துக்கும் பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அங்கீகாரம் வழங்கியது.



அத்துடன், இத்தாலிக்கான இலங்கைத் தூதுவராக எயார் மார்ஷல் சுமங்கள டயஸை நியமிப்பதற்கும் இங்கு அனுமதி வழங்கப்பட்டதாக தம்மிக தஸநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் ஜோன்ஸ்டன் பர்னாந்து, அமைச்சர்களான நிமல் சிறிபால டி. சில்வா, உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், டி. சித்தார்த்தன் மற்றும் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்



சிறப்புக் கட்டுரை

## ஜனாதிபதி கூட தலைமை தாங்கும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

**இலங்கை பாராளுமன்றத்தில் செயற்படும் குழுக்கள் மத்தியில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் பற்றி அடிக்கடி நாம் கேள்விப்பட்டுள்ளோம். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தலைமை தாங்கும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் தொடர்பில் பல்வேறு செய்திகளை பார்வையிடக் கிடைத்திருக்கும். எனினும், இந்தக் குழுக்களின் ஆரம்பம் மற்றும் அவற்றின் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள எதிர்பார்க்கின்றோம்.**

ஆமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் முதலில் 'ஆலோசனைக் குழுக்கள்' என்றே அறியப்பட்டன. 1978ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி அப்போதைய பிரதமர் கௌரவ பிரேமதாச அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய அப்போது நடைமுறையில் இருந்த நிலையியற் கட்டளைகள் திருத்தப்பட்டு இலங்கை பாராளுமன்றத்தில் ஆலோசனைக் குழுக்கள் முதல் தடவையாக உருவாக்கப்பட்டன.

இதற்கமைய 1978ஆம் ஆண்டு ஒக்டோபர் 04ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழு 2015ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக செயற்பட்டு வந்தன. 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி முதல் புதிய நிலையியற் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கியதுடன் ஆலோசனைக் குழுக்கள், அமைச்சுகார் ஆலோசனைக் குழுக்களாக விரிவுபடுத்தப்பட்டன.

அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், அவற்றை நடைமுறைப்படுத்தும் முறைகள் தொடர்பில் அரச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கலந்துரையாடல்களை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பொருத்தமான தளமொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதே அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் பிரதான நோக்கமாகும். இதனைவிடவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழ் உள்ள நிர்வாக நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளிடம் பிரச்சினைகளை முன்வைப்பதற்கு இவற்றின் ஊடாக வாய்ப்புக் கிடைக்கிறது.

விசேடமாக ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் குறித்த அமைச்சுடன் சம்பந்தப்பட்ட தமது தொகுதிகளில் காணப்படும் பிரச்சினைகளை முன்வைப்பதற்கும் உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைய அமைச்சுக்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். இவற்றின் தலைவர்களாக அமைச்சரவையில் உள்ள சம்பந்தப்பட்ட அமைச்சர் பணியாற்றுவதுடன், இதனைவிட இராஜாங்க அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்பட்ட ஏனைய ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன் உறுப்பினர்களாக செயற்படுவார்கள். இதற்கமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தில் இதுவரை 30 அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் செயற்படுகின்றன.



பொதுவாக பாராளுமன்றத்தில் சட்டமூலம், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் போன்றவை முன்வைக்கப்பட்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவை குறித்து விரிவாக ஆராய்வதற்கு வாய்ப்பை வழங்குவதற்காக அவை சம்பந்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்படும். அத்துடன் அரசாங்க நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள் அனுமதிக்காக அந்தந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் மாதத்துக்கு ஒரு தடவை கூடவேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்ட விடயங்கள் இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டும். அத்துடன் குழு முன்னிலையில் ஒரு நபரை அழைப்பதற்கும், ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள், கோப்புக்களை அழைப்பித்து அவை குறித்து விசாரிப்பதற்கும் நிலையியற் கட்டளைகளின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதுடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் அல்லது செயலாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடப்படும் பாராளுமன்றத்தின் அதிகாரி ஒருவர் இக்குழுவின் செயலாளராக நியமிக்கப்படுவார்.

பாராளுமன்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் பொறுப்புக்களை வினைத்திறனான முறையில் நிறைவேற்றுவது மற்றும் இவற்றின் பங்களிப்பை சிறப்பான முறையில் முன்னெடுப்பது தொடர்பில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிதி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய சட்ட மற்றும் கொள்கை தயாரிப்பு நடைமுறைகளின் போது இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டுவதற்கும், அவர்களுடன் வினைத்திறன் மிக்க வகையில் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இக்குழுக்களின் ஊடாக வாய்ப்புக் கிடைக்கிறது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற செயலாளர்கள் குழாம் சார்பில் கருத்துத் தெரிவித்த உதவிச் செயலாளர் நாயகம் டிக்கிரி கே.ஜயதிலக குறிப்பிடுகையில், இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அதற்கான வாய்ப்புக்களின் மத்தியில் இதுவரை பின்பற்றப்படும் நடைமுறையான பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு நிறைவேற்று அதிகாரத்தினால் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அப்பால் சென்று வினைத்திறனான முறையில் இவ்விடயங்களைத் தீர்த்து வைப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது என்றார். அத்துடன், நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறை என்பன மிகவும் நெருக்கமாக இணங்கிச் செயற்படும் கலப்பு ஆட்சிமுறை எமது நாட்டில் காணப்படும் பின்புலத்தில் சட்டவாக்கத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்று அதிகாரத்துடன் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இந்த நிலையில் எமது பாராளுமன்றத்தை சர்வதேச தரப்பட்டியலில் உயர்ந்த இடத்தில் கொண்டு செல்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம், சில விடயங்கள் குறித்த இக்குழுக்களில் கலந்துரையாடல்களை முன்னெடுக்கும்போது குறித்த துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து அதிகாரிகள் மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகள் மத்தியில் விரிவான கலந்துரையாடல்களை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் ஆராயப்பட்டது. தற்போதைய உலக மாற்றம் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றுக்கு ஏற்ற வகையில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டங்களை நடத்துவதன் அவசியத்தையும் கௌரவ பிரதமர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய, மாற்றங்களுடன் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களுக்கு எதிர்காலத்தில் விசேட பணியை ஆற்றமுடியும்.

*சௌம்ய ஏக்கநாயக்க*
*ஊடக அதிகாரி*
*தொடர்பாடல் திணைக்களம்*

செய்தி

# இலங்கை - ரஷ்ய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் புதிய தலைவராக இராஜங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நியமனம்





**இலங்கை - ரஷ்ய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவுசெய்யப்பட்டார். அண்மையில் நடைபெற்ற இலங்கை - ரஷ்ய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் கூட்டத்திலேயே அவர் நியமிக்கப்பட்டார்.**

கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மற்றும் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மெடேரி ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதில் புதிய செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசமும், உப தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான மொஹமட் முஸம்மில், அரவிந்த குமார் மற்றும் வைத்தியகலாநிதி உபுல் கலப்பதி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இதனைவிட பாராளுமன்ற உறுப்பினர் வண.அதுரலிய ரத்ன தேரர் பொருளாளராகவும், பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்தி அதுகோரல உதவிச் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலங்கை தனது தொழில்துறைக்கான அடித்தளத்தை இடுவதற்கு உதவி வழங்கிய முதன்மையான நாடுகளில் ரஷ்யாவும் ஒன்றாகும் என்பதை நாம் மறந்துவிட முடியாது என்பதுடன், சிலோன் ஸ்டீல் கோப்ரேஷன், சிலோன் டயர் கோப்ரேஷன் மற்றும் சிலோன் சீனி கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று தொழில்துறை திட்டங்களும் அந்நாட்டின் உதவியுடனேயே இலங்கையில் நிறுவப்பட்டன என்று சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன், 1998ஆம் ஆண்டு ஒக்டோபர் 09ஆம் திகதி இலங்கை-ரஷ்ய பாராளுமன்ற நட்புறவு சங்கம் முதன் முதலில் உருவாக்கப்பட்டது. சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரும், அந்நேரத்தின் பிரதமராகவும், மீன்பிடித்துறை அமைச்சருமாகவிருந்த கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களே இதன் முதலாவது தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.







செய்தி

# இலங்கை - சீன பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக நாமல் ராஜபக்ஷ தெரிவு





**இலங்கை-சீன பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் புதிய தலைவராக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட இச்சங்கத்தின் கூட்டத்திலேயே இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் ஆகியோர் இதில் கலந்துகொண்டதுடன், இலங்கை-சீன பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி.தொலவத்த நியமிக்கப்பட்டார்.

இச்சங்கத்தின் உபதலைவர்களாக வைத்திய கலாநிதி உபுல் கலப்பதி, அரவிந்த குமார் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும், உதவிச் செயலாளராக மொஹமட் முஸம்மிலும், பொருளாளராக இஷாக் ரஹ்மான் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, கி.மு 206ஆம் ஆண்டிலிருந்து இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் காணப்படுவதாகவும், 1957ஆம் ஆண்டு முதல் உத்தியோகபூர்வமாக இரு நாட்டுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உறவுகள் மேலும் பலப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கொவிட் 19 வைரஸிலிருந்து பாதுகாப்பதற்கு சீன அரசாங்கம் இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்த ஒத்துழைப்புக்களைப் பாராட்டிய சபாநாயகர், இலங்கையின் அந்நியச் செலாவணியைப் பாதுகாப்பதற்குக் கிடைத்துள்ள முதன்மையான ஆதாரமாக சீனா காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இரு நாட்டுக்கும் இடையில் காணப்பட்ட உயர்மட்ட தொடர்புகள் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன், சீன ஜனாதிபதி ஷீ ஜின்பின் அவர்கள் 2014ஆம் ஆண்டு மேற்கொண்ட விஜயம், முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு மேற்கொண்ட விஜயம் இதற்கு சிறந்த உதாரணங்களாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், எட்டாவது பாராளுமன்றத்தின் காலப்பகுதியில் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பணியாளர்களுக்கு சீன அரசாங்கம் பெற்றுக் கொடுத்த சுற்றுப் பயணங்களுக்கு நன்றி தெரிவித்த சபாநாயகர், 2016ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தூதுக்குழுவுடன் சீனா செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தமையையும் நினைவுகூர்ந்தார். இக்கூட்டத்தில் உரையாற்றிய சீனத் தூதுவர், இலங்கை-சீன நட்புறவு சங்கத்தை மீண்டும் ஸ்தாபித்தமைக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். இது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்றும், இலங்கைக்கு மேலும் ஆதரவை வழங்க சீனா தயாராக இருப்பதாகவும் கூறினார்.

செய்தி

# பெருந்தோட்டத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரண இலங்கை - ஜப்பான் பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவர் பதவிக்குத் தெரிவு



**ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இலங்கை - ஜப்பான் பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் புதிய தலைவராக பெருந்தோட்டத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரணவும், புதிய செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.**

கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகிரா சக்யாமா மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க ஆகியோர் தலைமையில் நடைபெற்ற நட்புறவு சங்கக் கூட்டத்திலேயே இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், ஜே.சி. அலவத்துவல மற்றும் பிரேம்நாத் சீ.தொலவத்த ஆகியோர் உப தலைவர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷ பொருளாளராகவும், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன் மற்றும் மேஜர் சுதர்ஷன தெனிபிட்டிய உதவிச் செயலாளர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.


இலங்கையின் கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான எம்.ஆர்.ஐ. ஸ்கானர், சீ.ரி. ஸ்கானர், பெட் சைட் எக்ஸ்-ரே முறைமை மற்றும் மத்திய கண்காணிப்பு போன்ற 1,360 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்கிய ஜப்பான் அரசாங்கத்துக்கு கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நன்றி தெரிவித்தார்.

இது நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் ஆரம்பத்தில் மதம் மற்றும் காலாசாரத்துடன் அதிகம் சம்பந்தப்பட்டதாகக் காணப்பட்டது. இந்த கலாசார இணைப்பு நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசியல் மற்றும் பொருளாதாரத்துடன் வலுப்பெற்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.



சிறப்புக் கட்டுரை

# பிரித்தானிய ஜனநாயகத்தின் பயணப் பாதை



**உலகில் எந்தவொரு நாட்டிலும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் உயர்ந்த ஸ்தானமாகவே பாராளுமன்றம் கருதப்படுகின்றது. நேரடி ஜனநாயக முறையிலிருந்து பிரதிநிதித்துவ ஜனநாயகம் வரையான ஜனநாயகத்தின் இந்த பயணம் தனிநபர் ஒருவரதோ அல்லது ஒரு குழுவினரதோ தனிப்பட்ட முயற்சியின் பிரதிபலன் அல்ல. அது நீண்ட ஒரு பயணத்தின் பிரதிபலனாகும். அந்தப் பயணத்தின் திருப்புமுனைகள் தொடர்பில் இந்தக் கட்டுரையில் நாம் விவாதிக்கவுள்ளோம்.**

புராதன கிரேக்கத்தில் தோற்றம் பெற்ற நேரடி ஜனநாயகம், பின்னர் பிரதிநிதித்துவ ஜனநாயகமாக 13, 14 மற்றும் 15 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தை மையப்படுத்தி விருத்தி அடைந்தது. அதற்கமைய நோக்கும்போது இலங்கை பாராளுமன்றம் அடிப்படையாகக் கொண்டியங்கும் பெரிய பிரித்தானியாவின் சட்டவாக்கம் அதன் தற்போதைய வடிவத்தை அடைவதற்கு சுமார் 1400 வருடங்கள் வரையான நீண்ட காலம் எடுத்துள்ளது. அது பல்வேறு கூட்டு அரசியல் முயற்சிகளின் நீண்டகால பிரதிபலனாகும்.

அறிந்து கொள்வதற்கு இலகுவான வகையில் பிரித்தானிய சட்டவாக்கத்தின் பரிணாமம், அது இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பிரதான ஆறு காலகட்டங்களாக பிரிக்கப்படுகின்றது.

- ☐ ஆங்லோ செக்ஸன் காலம்
- ☐ நோமன் காலம்
- ☐ அங்கவின் (பிளான்ட் ஜெனட்) காலம்
- ☐ ஸ்டுவர்ட் காலம்
- ☐ ஹனோமர் காலம்

**ஆங்லோ செக்ஸன் காலம்**


சுமார் 600 வருடங்களாக காணப்பட்ட இந்த காலம் நவீன பாராளுமன்ற முறைமையின் ஆரம்பம் ஆகும். சிறிய பிராந்திய ஆட்சியாளர்கள் ஒரு பலமான பிராந்திய ஆட்சியாளரின் கீழ் வரும் போது உருவாகும் அரசாங்கம், பிராந்திய ஆட்சிகள் உருவாகின்றமை என்பன இந்தக் காலத்தில் காணப்படும் விசேட இரண்டு அம்சங்களாகும். அரசர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு முக்கிய மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் அடங்கிய புலனாய்வு சபை (விடனமோ சபை) ஒன்று காணப்படுகின்றமையும் மற்றுமொரு விசேட அம்சமாகும்.

**நோமன் காலம்**

பிருத்தானிய சட்டவாக்கத்தின் பரிணாமத்துடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்கள் இந்தக் காலத்துக்கு உரியவையாகும். உதாரணமாக பிரவி கவுன்சில், கபினட் சபை மற்றும் திறைசேரியின் ஆரம்ப கட்டம் உருவாகியமை கிறிஸ்துவுக்குப் பின் 1066 இல் உருவான இந்தக் காலத்தில் ஆகும். நோமனில் வில்லியம் 1066 இல் இங்கிலாந்தை கைப்பற்றினார். அதன்பின்னர் அவர் புலனாய்வு சபையை கலைத்து புதிய சபையொன்றை உருவாக்கினார். அதன்மூலம் மன்னரின் அதிகாரத்தில் அதிகாரிப்பொன்று இடம் பெற்றமையும் நோமன் காலத்தில் கண்டுகொள்ள முடியும்.

**அங்கவின் (பிளான்ட் ஜெனட்) காலம்**

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான எந்தவொரு உரையாடலிலும் அங்கவின் (பிளான்ட் ஜெனட்) காலத்தில் உருவான மக்னாகாட்டா உடன்படிக்கை கவனத்தை பெறுகின்றது. மனித உரிமைகள் தொடர்பான முக்கியமான வரலாற்று நிகழ்வுகளில் ஒன்றாக இது காணப்படுவதால்








பிரித்தானியாவில் மட்டுமல்லாது முழு உலகத்திலும் சட்டவாக்க பரிணாமத்தின் ஒரு விசேட திருப்புமுனையாக இது கருதப்படுகின்றது. பிளான்ட் ஜெனட் என்பது இங்கிலாந்தின் அரச வம்சமாகும்.

கி.பி. 1215 இல் பிரகடனப்படுத்தப்பட்ட மக்னாகாட்டா உடன்படிக்கை, தற்போதைய ஜனநாயக போராட்ட உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாகவும் குறிப்பிட முடியும். பொது உடன்படிக்கை எனும் அர்த்தத்தை வழங்கும் இந்த உடன்படிக்கை, இங்கிலாந்தின் ஜோன் மன்னன் மற்றும் பிரபுக்களுக்கிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதாகும். 1213 இல் இங்கிலாந்தின் ஜோன் மன்னன் முகங்கொடுத்த அரசியல் நெருக்கடிக்கான தீர்வாக கையொப்பமிட்ட இந்த உடன்படிக்கையூடாக மன்னர் உட்பட அனைவரும் ஒரு சட்டத்தின் கீழ் வருவதை உறுதிப்படுத்தப்படுகிறது.

புராதன பிரித்தானியாவின் அதிகாரம் பிரதான மூன்று நிறுவனங்களிடையில் பகிரப்பட்டு காணப்பட்டது. அந்த அதிரப் பகிர்வு முறையே அரசன், கத்தோலிக்க தேவாலயம் மற்றும் பிரபுக்களுக்கிடையில் பகிரப்பட்டிருந்தது. அதுவரையும் ஜோன் மன்னன், தேவாலயம் மற்றும் வம்ச பிரதானிகளுக்கிடையில் அதிகாரம் தொடர்பில் நெருக்கடி உருவாகி வந்ததால், அதிகாரம் குறைவாக இருந்த மன்னனுக்கு பிரதானிகளின் உடன்படிக்கைக்கு இணங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இல்லாவிட்டால் மன்னனுக்கு எதிராக யுத்தம் பிரகடனப்படுத்தப்படும் என்ற பயத்திலாகும்.

ஜோன் மன்னனுக்கு எழுத்தறிவு இல்லை என்பதால் அவர் அந்த ஆவணத்தின் மீது முத்திரை வைத்தார். கி.பி. 1254 இல் மூன்றாம் ஹென்றி மன்னருடன் வரி அறவிடுதல் பிரச்சினை ஒன்று காரணமாக முரண்பாடு எழுந்தது. இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட வம்ச பிரதானிகள் தமது தலைவர் ஒருவரை நியமித்து 1265 இல் முதலாவது பாராளுமன்றம் அல்லது பிரதிநிதிகள் சபையை கூட்டினர். கி.பி. 1295 இல் எட்வட் மன்னன் வரிக்கு அனுமதி பெறுவதற்கு பொதுமக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட கீழ்வரும் மூன்று குழுக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

1) மன்னருடனான மத குருமார்கள் குழு
2) மன்னருடனான பிரபுக்களின் குழு
3) பொதுமக்கள் பிரதிநிதிகள் குழு

இந்த மூன்று குழுக்களினதும் முதலிரண்டு குழுக்களின் கருத்துக்கள் ஒரே வகையாக இருந்ததால் அவை பின்னர் இரண்டு சபைகளாக உருவாக்கப்பட்டது. அது இரட்டை சபையின் ஆரம்பமாகவும் இருந்தது. முதலிரண்டு குழுக்களினதும் கூட்டு சாமி பிரதிநிதிகள் சபை என அழைக்கப்பட்டது. மற்றைய பொதுமக்கள் பிரதிநிதிகள் குழு பொதுமக்கள் பிரதிநிதிகள் சபை என அழைக்கப்படும் இன்று பரவலாக பயன்பாட்டில் உள்ள House of Commons என அழைக்கப்பட்டது.



*என்.எச்.எம். ஜானக*
*உணவு வழங்கல் மற்றும் வீட்டுப் பராமரிப்புத் திணைக்களம்*

செய்தி

# இறக்குமதி செய்யப்படும் உணவுகளில் அடங்கியுள்ள தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தவும் -அரசாங்க கணக்குகள் பற்றிய குழு அறிவுறுத்தல்



**நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களில் உள்ளடங்கியிருக்கும் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் குறித்து விசாரணை செய்வதற்கான அதிகாரம் சுகாதார அமைச்சுக்கே இருப்பதாகவும், இதற்கமைய உணவுப் பொருட்களில் காணப்படும் தீங்கிளைக்கும் பதார்த்தங்கள் குறித்து விரிவான விசாரணைகளை நடத்துமாறும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது.**

உணவுகளைப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூட வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், உணவுப் பாதுகாப்புத் தொடர்பான சட்டம் விரைவில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண குறிப்பிட்டார்.

உணவுகளைப் பரிசோதனை செய்யும் ஆய்வுகூடங்களுக்கிடையில் உரிய தொடர்புகள் இன்மையால் நிலைமை தற்பொழுது மோசமடைந்துள்ளது என அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முன்னாள் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண சுட்டிக்காட்டினார். நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய வேலைத்திட்டமொன்று இன்மையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், மற்றும் 2017/2018 ஆண்டு காலப் பகுதியில் சுகாதார அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, சுகாதார அமைச்சின் செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு கூடியபோதே இவ்விடயங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டன.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் அழகுசாதனப் பொருட்களில் மிகவும் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் உள்ளன என்று பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய சுட்டிக்காட்டினார். அழகு சாதனப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு முறையான ஒழுங்குமுறையொன்றை உருவாக்குவது முக்கியமானது என்றும், இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் சட்ட திட்டங்களே உணவுப் பாதுகாப்புக்காக நடைமுறைப்படுத்தப்படுவதால், உணவுகளின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பது அவசியமானது என்றும் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, நிரோஷன் பெரேரா, வைத்தியகலாநிதி உபுல் கலப்பதி, வீரசுமன வீரசிங்ஹ ஆகியோரும், சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர். இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ஐந்து வருடங்களில் புத்தாக்கத்திட்டங்களை ஊக்குவிக்க 346 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2017ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 34 புத்தாக்க ஆய்வுத் திட்டங்களுக்காக 399 மில்லியன் ரூபா அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் குழு விசேட கவனம் செலுத்தியது. ஒரு தனி நபர் மேற்கொண்ட ஆராய்ச்சி திட்டங்கள் ஆராய்ச்சி திட்டங்களின் பயனற்ற தன்மைக்கு வழிவகுத்தன என்பதும் இங்கு தெரியவந்தது.



களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு 07 மாடிகளைக் கொண்ட மிலேனியம் வார்ட் தொகுதியை அமைப்பதற்கு 398 மில்லியன் ரூபா பெறுமதியான ஒப்பந்தம் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டடத் தொகுதியின் வேலைகள் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதும், 2014 மார்ச் 06ஆம் திகதி வரையில் இதன் வேலைகள் பூர்த்திசெய்யப்படாது ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமையும் இங்கு புலப்பட்டது.

அதுவரையான காலப் பகுதியில் குறித்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட 51 மில்லியன் ரூபாவை மீள வசூலிக்க முடியாமல் போனமை குறித்தும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு விசேட கவனம் செலுத்தியது. இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு குழு பணிப்புரை வழங்கியது.

சுகாதார அமைச்சுக்குப் புதிய கட்டடத் தொகுதியொன்றை அமைப்பதற்கு வரிகள் உள்ளடங்கலாக 3,896 மில்லியன் ரூபா பெறுமதியான ஒப்பந்தம் 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் 29ஆம் திகதி CECB க்கு வழங்கப்பட்டுள்ளபோதும், இக்கட்டடத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், மாநகரசபையின் உரிய அனுமதி பெறப்படவில்லையென்பதும் இங்கு வெளியானது.

2006ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் 31.71 மில்லியன் ரூபா செலவில் 224 கைவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்யும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டபோதும் 15 வருடங்களுக்கு மேலாக அவை செயலற்ற நிலையில் இருப்பது தொடர்பில் குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

செய்தி

# உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலினால் உயிரிழந்தவர்களை நினைவுகூறும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலியை செலுத்த பாராளுமன்றம் நடவடிக்கை

**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக உயிரிழந்தவர்களுக்காக கௌரவ மஹிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கைக்கு அமைய ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.**

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பாராளுமன்ற ஆரம்பத்தின் போது விசேட கூற்றொன்றை முன்வைத்ததுடன், உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட வேண்டும் என சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுத்தார். இதற்கு அமைய சபையிலிருந்த அனைத்து அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு நிமிட மௌன அஞ்சலியைச் செலுத்தினர்.

செய்தி

# மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடையில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரத்துக்கு வருடாந்தம் ஏற்படுகின்ற நஷ்டம் 20 பில்லியன் ரூபா



**2015ஆம் ஆண்டு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுக்கு அமைய மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடைகயில் 270,000 மெற்றிக் தொன் வீண்விரயமாவதுடன், இதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏறத்தாழ 20 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா) தெரியவந்தது.**

இந்த அறிக்கையின் அவதானிப்புக்கு அமைய இலங்கையில் மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பின்னரான பாதிப்பு 30-40 வீதம் என்பதும் புலப்பட்டது.

இலங்கையில் வயது முதிர்ந்தவர்களில் 73 வீதமானவர்கள் போதியளவு மரக்கறி மற்றும் பழங்களை நுகர்வதில்லையென்றும், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகள் மத்தியிலான மந்தபோசனை மட்டம் 21 வீதமாகக் காணப்படுவதாகவும் இந்த அறிக்கையில் வெளிப்பட்டது.

தேசிய விவசாயக் கொள்கை தொடர்பான இறுதி வரைபு 2019ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டுள்ளபோதும் இது இன்னமும் வரைபாகவே காணப்படுகின்றமை தொடர்பிலும், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சந்தையை உள்ளடக்கிய விவசாயக் கொள்கையொன்றுக்கான தேவை காணப்படுவது குறித்தும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பின்னரான பாதிப்பை குறைப்பது மற்றும் நியாயமான விலைக்கு அவற்றை விற்பனை செய்வதில் அரசாங்க நிறுவனங்களின் தலையீடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்று அறிக்கை அரசாங்கக் கணக்குகள் குழுவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்கண்ட விடயங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், நுகர்வோருக்கும், விவசாயிகளுக்கும் இடையில் பாரிய பிரச்சினையாகக் காணப்படும் இடைத்தரகர்களால் அதிக இலாபம் ஈட்டப்படுவதைத் தடுப்பதற்கும், மரக்கறி மற்றும் பழங்களில் அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் பாதிப்பைக் குறைத்து நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இக்குழுவின் உறுப்பினர்கள் கவனம் செலுத்தியிருந்தனர். இலங்கையர்களின் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் விளைச்சல் தொடர்பில் விரிவான திட்டம் ஒன்று இன்மையால் விவசாயிகள் தாம் நினைத்த விளைச்சல்களை மேற்கொள்வதால் சில பயிர்கள் மாத்திரம் அதிக விளைச்சல் மேற்கொள்ளப்படுவதாகவும் குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் ஒரு தடவை அடுத்த இரு வாரங்களில் மேற்கொள்ளக்கூடிய விளைச்சல்கள் குறித்து முன்னறிவிப்பொன்றை வழங்குவதற்கான நடவடிக்கையொன்றை மேற்கொள்வது விவசாயிகளுக்கு நன்மையளிப்பதாக அமையும் என கோபா குழுவின் தலைவர் தெரிவித்தார். இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக, தயாசிறி ஜயசேகர, சுதர்ஷினி பெர்னாந்துபுள்ளே, லசந்த அழகியவண்ண, பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஞ்சித் பண்டார மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# படைக்கலசேவிதர்





திரு.நரேந்திர பெர்னாந்து
*படைக்கலசேவிதர்*



திரு. குஷான் சம்பத் ஜயரத்ன
*பிரதி படைக்கலசேவிதர்*



திரு.அச்சிந்த ஸ்ரீலால் குரே
*உதவி படைக்கலசேவிதர்*

# செங்கோலுக்கான பொறுப்பை வகிக்கும் படைக்கல சேவிதர்

**சபாநாயகரின் கட்டளையின்படி பாராளுமன்றின் ஒழுங்கை பேணும் அதிகாரி படைக்கலச் சேவிதர் ஆவார். அவ்வாறே பாராளுமன்றத்தின் அதிகாரச் சின்னமாகத் திகழும் செங்கோலின் பொறுப்பை வகித்தல் பாராளுமன்ற தொகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் ஆகிய பொறுப்புகளை சுமப்பவரும் பாராளுமன்றின் படைக்கலச் சேவிதர் ஆவார்.**

இவரே படைக்கலச் சேவிதர் திணைக்களத்தின் பிரதானி ஆவதுடன் துணை படைக்கலச் சேவிதர் மற்றும் பிரதி படைக்கலச் சேவிதர் உள்ளடங்கலாக 140 பேர் கொண்ட திணைக்களமாக படைக்கலச் சேவிதர் திணைக்களம் இயங்குகிறது. பாராளுமன்றில் உள்ள திணைக்களங்களில் இரண்டாவது பழமையான திணைக்களமான படைக்கலச் சேவிதர் திணைக்களத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பு கூற வேண்டியவர் படைக்கலச் சேவிதர் ஆவார்.

அவ்வாறு புதிய நியமனங்களை சபைக்கு அறிவிக்கும் போது உரையாற்றல் மற்றும் ஒருவர் ஓய்வு பெற்று செல்லும் போது வாழ்த்து உரை வழங்குதல் ஆகியவற்றில் அதிகாரம் பெற்ற இருவரில் ஒருவராக படைக்கலச் சேவிதர் காணப்படுகின்றார்.

படைக்கலச் சேவிதர் பதவியின் ஆரம்பம் பிரித்தானிய பாராளுமன்ற வரலாற்றின் ஆரம்பம் தொட்டு வருகிறது. இலங்கையின் முதலாவது படைக்கலச் சேவிதர் 1947 இல் நியமிக்கப்பட்டார். திரு. எம். இஸ்மாயில் அவர்கள் எமது நாட்டின் முதல் படைக்கலச் சேவிதர் ஆவார். திரு. ஜே.ஆர். த சில்வா, திரு. ரொனீ அபேசிங்க, திரு. விஜய பள்ளியகுருகே, திரு. அனில் பராக்கிரம சமரசேகர, பாராளுமன்றில் படைக்கலச் சேவிதர்களாக பதவி வகித்தவர்கள் ஆவர். எமது தற்போதைய படைக்கலச் சேவிதராக திரு.நரேந்திர பிரனாந்து அவர்கள் கடமையாற்றுவதுடன் பிரதி படைக்கலச் சேவிதராக குசான் சம்பத் ஜயரத்ன துணை படைக்கலச் சேவிதராக அச்சிந்த ஷீமால் அவர்களும் பதவி வகிக்கின்றனர்.

செங்கோலின் பொறுப்பு படைக்கலச் சேவிதரையே சாருவதுடன் பாராளுமன்ற சபை நிகழ்வு ஆரம்பிக்கும் போது செங்கோலை சபை மத்தியில் வைத்தல் வேண்டும். சபை கூடும் அனைத்து சந்தர்ப்பங்களின்போதும் செங்கோல் முக்கிய பாத்திரம் வகிக்கிறது. இச்செங்கோல் 1949ஆம் ஆண்டு பிரித்தானிய பிரதிநிதிகள் சபையால் எமக்கு பரிசாக வழங்கப்பட்டதாகும்.

சபையினுள் தலைமை வகிப்பவரால் வழங்கப்படும் அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்றும் பொறுப்பு படைக்கலச் சேவிதரையே சாரும்.யாரேனும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலாசனத்தில் தலைமை தாங்குபவரின் அதிகாரத்துக்கு அடிபணியாமையின்போது அது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு நிலையியற் கட்டளை சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாக சபாநாயகரின் கட்டளைப்படி படைக்கலச் சேவிதரையே சாரும்.

உரிய முறையிலன்றி உடை அணிந்து சபைக்குள் நுழையும் எந்த பாராளுமன்ற உறுப்பினரையும் உடனடியாக சபையில் இருந்து வெளியேறும்படி வேண்டுகோள் விடுப்பதற்கு படைக்கலச் சேவிதர் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். பாராளுமன்றின் வரப்பிரசாதங்கள் தொடர்பாக சபாநாயகர் வழங்கும் கட்டளைகளை நிறைவேற்றும் பொறுப்பு படைக்கலச் சேவிதருக்குரியதாகும். அமர்வுத் தினமொன்றில் பராளுமன்ற வளாகத்தினுள் அல்லது கட்டிடத்தினுள் ஒழுக்கமற்ற முறையில் நடந்துள்ளார் அல்லது கட்டிடத்தினுள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளார் அல்லது குழப்பம் விளைவித்துள்ளார் அல்லது அடுத்தவர்களுக்கு அவ்வாறு செய்ய ஆதரவளித்துள்ளார் என்பதற்காக குற்றவாளியாக்கப்பட்டிருக்கும் எந்த ஆளையும் பிடியாணை இன்றி சபாநாயகரின் எழுத்து மூல அல்லது வாய்மூல கட்டளைக்கிணங்க கைது செய்வதற்கும் பாராளுமன்ற சட்டம் மற்றும் நிலையியற் கட்டளைகளின் கீழ் பாராளுமன்றம் அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமா இல்லையா என தீர்மானிக்கும் வரையான அத்தகைய காலத்துக்கு பாதுகாப்பான தடுப்புக் காவலில் அவரை வைத்திருக்கவும் படைக்கலச் சேவிதருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

சபையின் சாதாரண அமர்வுத் தினங்களின்பொழுது படைக்கலச் சேவிதர் வெள்ளை நிற சீருடையை அணிந்திருப்பதுடன், சம்பிரதாய வைபவங்களின்போது விசேடமாக வடிவமைக்கப்பட்ட கறுப்பு நிற வைபவ ரீதியான உடையில் இருப்பார். அத்துடன் தனது உடையின் அங்கமாக ஆயுதத்தை பாராளுமன்றிற்குள் கொண்டு செல்லும் அதிகாரம் படைக்கலச் சேவிருக்கு மட்டும் உரியதாகும். சபையின் பிரதான நுழைவாயில் அருகே படைக்கலச் சேவிதருக்கென சிறப்பு ஆசனம் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற தொகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸ், முப்படை மற்றும் புலனாய்வு பிரிவின் உதவியைப் பெற்று அது தொடர்பான நடவடிக்கைகளை படைக்கலச் சேவிதரால் மேற்கொள்ள முடியும். பாராளுமன்றின் புதிய அமர்வை உற்சவ ரீதியாக ஆரம்பித்து வைத்தல், வெளிநாட்டு இராஜாங்க தலைவர்கள் சபையில் உரையாற்றும் போது அது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், அரச மரியாதையுடன் இடம்பெறும் இறுதி அஞ்சலி நிகழ்வுகளுக்கான முன்னேற்பாடுகளை கவனித்தல் போன்ற பொறுப்புகளும் படைக்கலச் சேவிதரையே சாரும். பாராளுமன்ற சபை கூட்டம் நடைபெறுவதற்கு தேவையான ஏற்பாடுகளை கவனித்தல், பாராளுமன்ற தொகுதியின் மக்கள் மற்றும் சிறப்பு அதிதிகளின் கலரிகளை நிர்வகித்தல், பாராளுமன்றத்திற்கான அனுமதி பத்திரங்களை வழங்குதல், ஆகியவற்றை படைக்கலச் சேவிதரே மேற்கொள்வார். இவ்வாறாக பாராளுமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள படைக்கலச் சேவிதர் திணைக்களம் பாரிய துணையாக உள்ளது.


***ஆசிரி ஹபுகொட***
***ஊடக அதிகாரி***
***தொடர்பாடல் திணைக்களம்***

## செய்தி

# பாராளுமன்ற பணியாளர்கள் இம்முறையும் தலதா மாளிகையில் 'முல்தன் பூஜை'







**உலகம் முழுவதிலும் உள்ள பௌத்தர்களால் உயர்வாக மதிக்கப்படுகின்ற கண்டி மாநகரில் அமைந்துள்ள தலதா மாளிகையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள புத்த பகவானின் புனித தந்த தாதுவக்கு ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதி ஆகிய இரு தினங்களும் 'முல்தன் பூஜை' இவ்வருடமும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.**

கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோரின் வழிகாட்டில்களின் கீழ் பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பௌத்த சங்கத்தின் ஊடாக ஏப்ரல் 29ஆம் திகதி பிற்பகல் கிலன் பச பூஜை நடத்தப்பட்டது.

30ஆம் திகதி நண்பகல் தந்த தாதுவுக்கு முல்தன் பூஜை நிகழ்த்தப்பட்டது. சங்கத தக்ஷினாவின் பின்னர் நடத்தப்பட்ட நுகேகொட நாவலவில் உள்ள உதேனி முதுகுடா அவர்களும் இந்த பின்கமவில் கலந்துகொண்டார்.

செய்தி

# முத்துராஜவல சரணாலயத்தை தேசிய பூங்காவாக மாற்றுவதற்கு நடவடிக்கை



**முத்துராஜவல சரணாலயத்தை தேசிய பூங்காவாக மாற்றுவதற்குத் தேவையான அமைச்சரவைப் பத்திரத்துக்கான வரைபு ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருப்பதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியகலாநிதி அனில் ஜாசிங்ஹ தெரிவித்தார்.**

பேராசிரியர் திஸ்ஸ விதாரன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே அவர் இதனை வெளிப்படுத்தினார்.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் இதற்கு முன்னர் வழங்கிய பரிந்துரைக்கு அமைய முத்துராஜவல சரணாலயத்தைப் பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் ஜாசிங்ஹ தெரிவித்தார். இந்தக் குழுவில் நகர அபிவிருத்தி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள் இணைத் தலைவர்களாக செயற்படுவார்கள் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.
இந்தக் குழுவை செயற்படுத்துவதற்காக ஏற்கனவே கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு அமைச்சரவைப் பத்திரத்துக்கான வரைபு உருவாக்கப்பட்டிருப்பதுடன், இதற்கு உரிய அங்கீகாரம் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும், இக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்களை உள்ளடக்கிய செயற்குழுவொன்று அவசியம் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

2021 ஜனவரி 27ஆம் திகதி மேல்மாகாண ஆளுநரினால் முத்துராஜவல போன்ற உணர்திறன் மிக்க வலயங்களில் உள்ள 600 ஏக்கர் தனியார் காணிகளை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் எடுப்பது தொடர்பான தீர்மானம் கம்பஹா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமை குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

முத்துராஜவல வலயத்துக்குச் சொந்தமான பகுதியில் காணிகள் சட்டவிரோதமாக நிரப்பப்படுகின்றமை தொடர்பில் பல முறைபாடுகள் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, கமநல சேவைகள் திணைக்களம் போன்ற




நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை குறித்தும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டது.

முத்துராஜவல சதுப்புநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத நிர்மாணங்கள் குறித்த முறைப்பாடுகள் அந்தந்த அரசாங்க நிறுவனங்களின் ஊடாக உரிய முறையில் விசாரணை செய்யப்படாமை தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதுடன், அண்மையில் அவ்வாறு நிரப்பப்பட்ட 06 ஹெக்டெயர் நிலப்பரப்பு தொடர்பில் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், இவை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை சட்டவிரோத செயற்பாட்டாளர்களுக்கு வாய்ப்பாக அமைந்திருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் 15ஆம் திகதி இலங்கை கைச்சாத்திட்ட ரம்ஸா சமவாயத்துக்கு அமைய முத்துராஜவல சதுப்புநில வலயம் ரம்ஸா சதுப்புநிலமாக பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் அதனை தேசிய பூங்காவாக மாற்றுவது தொடர்பான குழுவின் நிலைப்பாடு குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது பற்றியும் அதிகாரிகள் இங்கு விளக்கமளித்தனர்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்னாயக, நிரோஷன் பெரேரா, சிவஞானம் சிறிதரன், பீ.வை.ஜீ.ரத்னசேகர, வைத்தியகலாநிதி உபுல் கலப்பதி, கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள், 16 அரச நிறுவனங்களின் அதிகாரிகள் போன்றோரும் கலந்துகொண்டனர்.

# எச்.ஈ. ஜனகாந்த சில்வா இலங்கை பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு



**திரு.எச்.ஈ. ஜனகாந்த சில்வா இலங்கை பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இறுதியாக பாராளுமன்ற பிரதிப் பணிப்பாளராக (நிர்வாகம்) பணியாற்றினார்.**

1990 ஜனவரி மாதம் எழுதுவினைஞராக பாராளுமன்ற சேவையில் இணைந்த எச்.ஈ. ஜனகாந்த சில்வா அவர்கள் ரோமின் ஏர்பன் பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் தொடர்பில் பட்டம் பெற்றுள்ளார்.

அரசியலமைப்பு சட்டம் (Constitutional Law) மற்றும் பாராளுமன்ற முறைமைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் 2 டிப்ளோமாக்கள், பாராளுமன்ற சட்டவாக்கம் (Legislative Drafting) தொடர்பில் விசேட வதிவிட பயிற்சி நெறியொன்றையும் முறையாக இந்திய ICPS மற்றும் மீளுவு ஆகிய நிறுவனங்களில் பெற்றுள்ளார். அதற்கு மேலதிகமாக சுவீடன், சீனா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளில் விசேட தொழில் ரீதியான பயிற்சி நெறிகளில் பங்கேற்று 31 வருட பாராளுமன்ற சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஜனகாந்த சில்வா அவர்கள் அதில் 24 வருடங்கள் இலங்கை பாராளுமன்றத்தின் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தில் பணியாற்றியுள்ளமை சிறப்பம்சமாகும்.

சிறப்புக் கட்டுரை

# அரசனற்ற ஒரு அரசனின் வாழ்க்கைப் பயணம்



**இரண்டாவது எலிசபெத் மகாராணியின் கணவராக 1947 ஆம் ஆண்டு அவரது கரம்பற்றி 73 ஆண்டுகள் அவருக்கு துணையாக வாழ்ந்தவர் எடின்பரோ கோமகன் ஆகிய இளவரசர் பிலிப் ஆவார். அவர் கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி தனது 99 ஆவது வயதில் காலமானார்.**

பிலிப் இளவரசர் 1921ஆம் ஜுன் மாதம் 10ஆம் திகதியன்று கிரேக்க கோர்பூ தீவில் பிறந்தார்.பிலிப்பின் தந்தை கிரீஸ் மற்றும் டென்மார்க் இளவரசர் ஆண்ட்ரூ ஆவார். அவரின் தாயார் விக்டோரியா மகாராணியின் பேத்தி அலிஸ் இளவரசி ஆவார்.



ஒரு வயதில் பிலிப் இளவரசர் கிரேக்கத்தில்

1922ஆம் ஆண்டில் கிரீஸ் மன்னனாகிய பிலிப்பின் மாமா கிரேக்க துருக்கி போரில் தோற்றதன் காரணமாக தங்கள் சிங்காசனம் இழந்து இராணுவத்தில் பணியாற்றிய தந்தையுடன் பாரீஸில் அவரது அடுத்த தசாப்தத்தை தொடங்கினார் இளவரசர் பிலிப். இது அவர்களுக்கு மிக மோசமான காலகட்டமாகும்.

மன்னர் பரம்பரை வழி வந்த இளவரசர் பிலிப் 1940ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இரண்டாவது உலகமகாயுத்தம் முடியும் வரை இராஜாங்க கடற்படையில் சேவை புரிந்தார். இவர் தனது பாடசாலை கல்வியை முடித்தவுடன் இராஜாங்க கடற்படையில் இணைந்து மாமனார் லுச்சி மவுன்ட் பெடன் ஆலோசனையின் பேரில் இங்கிலாந்து இராஜாங்க கடற்படை வித்தியாலயத்தில் உள்நுழைந்தார்.

இளவரசர் பிலிப் கடற்படையில் சேவை புரியும் காலகட்டத்தில் 13 வயது எலிசபெத் இளவரசியை சந்தித்தார். அவர்கள் இருவரும் விக்டோரியா மகாராணியின் பேரப்பிள்ளைகள் ஆதலால் எலிசபெத் மகாராணியின் உறவுமுறையின்படி இளவரசருக்கு ஒன்றுவிட்ட சகோதரியாவார். அவர்களது முதல் சந்திப்பிலேயே எலிசபெத் இராணியை பிலிப் இளவரசர் கவர்ந்து விட்டதாக கூறப்படுகிறது.



*1947 ஜுலை 31ஆம் திகதி இங்கிலாந்து* கொரிய பயிற்சி நிலையத்தில் தனது படையினரை பார்வையிட்டபோது



அந்த முதல் சந்திப்பின் பின்னர் 7 வருடங்கள் கழித்து 1947ஆம் ஆண்டில் இந்த ஜோடி அவர்களது திருமண நிச்சயதார்த்தம் தொடர்பாக உலகிற்கு அறிவித்தனர்.அவர்கள் இருவரும் நவம்பர் மாதம் வெஸ்மினிஸ்டர் தேவஸ்தானத்தில் திருமணம் முடித்தனர். 1947ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பிலிப் இளவரசர் தனது கிரேக்க டென்மார்க் சிங்காசன உரிமையை துறந்து தனது தாயின் மவுன்ட் பெடன் நாமத்தை தன் பெயருடன் இணைத்து பிரித்தானியர் ஆனார். அவர்களது திருமண தினத்தில் 6 ஆம் ஜோர்ஜ் மன்னரால் அவர் எடின்பரோ கோமகனாக நியமிக்கப்பட்டார்.

1948 ஆம் ஆண்டில் கோமகனும் எலிசபெத் மகாராணியும் தங்கள் முதல் குழந்தையான



இளவரசர் சார்ல்ஸின் பிறப்பை கொண்டாடியதுடன் 1950 ஆம் ஆண்டு இரண்டாவதாக பெண் குழந்தை ஒன்றினை பெற்றெடுத்தனர். அவர் ஆன் இளவரசியாவார். அதன் பின் 1960 இல் ஆண்ட்ரூ இளவரசனும், 1964 இல் இளவரசர் எட்வர்டும் பிறந்தனர்.

அவர்களது திருமணம் முடிந்து ஐந்து ஆண்டுகளின் பின்னர் அவர்கள் இருவரும் ஆபிரிக்க நாடுகளுக்கான



சுற்றுலாவில் இருக்கும்போது 6 ம் ஜோர்ஜ் மன்னர் தனது 57 ஆவது வயதில் மரணித்ததை தொடர்ந்து தனது 25 வது வயதில் பிலிப் இளவரசனின் மனைவி இரண்டாம் எலிசபெத் ஆக ஆட்சியேற்றார்.

எலிசபெத் மகாராணியானதை தொடர்ந்து பிலிப்பின் வாழ்வில் மற்றுமொரு பாரிய மாற்றம் நிகழ்ந்தது.அரச பரம்பரை வழி வந்தவராக பிறந்து வளர்ந்த பிலிப்பின் வாழ்க்கை அதுவரை ஆண்களின் அரசாட்சி நடத்திய நாட்களிலேயே நிகழ்ந்தது.ஆனால் ஒரே இரவில் அவர் தனது வாழ்க்கை காலம் முழுவதையும் மகாராணியாகிய தன் மனைவிக்கு துணையாக அவரது அடி பின்பற்றி நடப்பவராக மாற வேண்டி ஏற்பட்டது.அதனால் தனது கடற்படை தொழிலையும் தியாகம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அது மட்டுமன்றி மகாராணியின் ராஜாபிசேகத்தன்று மகாராணியின் முன் மண்டியிட வேண்டிய சூழலும் ஏற்பட்டது. அவரது வாரிசுகளுக்கு அவரது வம்ச பெயரான மவுண்ட்பேட்டன் பட்டத்தை குறிப்பிட முடியாமல் போனது.ஆயினும் செய்வதற்கு ஒன்றுமில்லை. காரணம் அவர் மகாராணியாரது கணவராக



இருப்பினும் எலிசபெத் மகாராணி அவர் உள்ளடங்கலாக மாபெரும் இராச்சியமொன்றின் மகாராணியாக முடிசூட்டப்பட்டமை ஆகும்.

பிலிப் இளவரசர் தனது வாழ்நாளை தனது மனைவியுடன் செலவிட்டதோடு எலிசபெத் மகாராணிக்காக அவர் தன்னை அர்ப்பணித்தும் கொண்டார். அத்துடன் அவரது சேவைக்காலத்தில் பாரிய உதவிகளையும் செய்தார். அவர் பாரிய முற்போக்காளராக குகருதப்படுகின்றார. அரச குடும்பத்தில் முதல் தொலைகாட்சி நேர்கானலை வழங்கியவராகவும் கோமகன் திகழ்கிறார். அது 1961ஆம் ஆண்டு மே மாதம் ரிச்சர்ட் டம்பல்ஹி உடனாகும். 2009 ஆம் ஆண்டில் அவர் பிரித்தானிய அரச வரலாற்றில் நீண்ட காலம் சேவை செய்த அரச குடும்ப துணைவரானார். கோமகன் தகுதிபெற்ற விமானியாவதுடன் 5986 மணி விமான பயண நேரத்துடன் 59 விதமான விமானங்களை செலுத்தும் அனுபவம் வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். பிலிப் இளவரசர் தனது மனைவி எலிசபெத் மகாராணியுடன் பொதுநலவாய நாடுகள் சுற்று பயணம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் அனைத்து பிரதேசங்களிலும் நடைபெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணி மற்றும் இளவரசர் பிலிப்





சுதந்திர இலங்கைக்கு 1953 மற்றும் 1981 ஆண்டுகளில் வருகை தந்துள்ளனர். பிலிப் இளவரசருக்கு சொந்தமான 90 ஆண்டுகள் பழமையான மோட்டார் கார் அரச சொத்தாக காலி முகத்திடல் ஹோட்டலில் இன்றும் காண முடியும். அவர் 1940 ஆம் ஆண்டு பிரித்தானிய கடற்படையில் பணியாற்றும் போது கொழும்பில் வசித்த காலத்தில் அவரது முதலாவது மோட்டார் வாகனத்தை 12 பவுண்டுக்கு கொள்வனவு செய்தார். 1950 களில் முதற்காலாண்டில் கோமகன் கொழும்பு காலி முகத்திடல் ஹோட்டலுக்கு வருகை தந்ததுடன் மோட்டார் வாகனத்தை பார்த்தவுடன் உடனடியாக அதனை வாங்க முயற்சித்ததாகவும் அதன் இயந்திரம்



சிறப்பாக இயங்குகிறதா என விசாரித்ததாகவும் பிரித்தானிய ஊடக நிறுவனமொன்று செய்தி வெளியிடிருந்தது. 73 ஆண்டுகாலமாக இரண்டாம் எலிசபெத் மகாராணியின் சக்தியாகவும் நிழலாகவும் இருந்த எடின்பரோ கோமகன் இறக்கும் போது அவருக்கு 99 வயதாகும்.

*மாதவி ரங்கேபண்டார*
*ஊடக அதிகாரி*
*இலங்கைப் பாராளுமன்றம்*

செய்தி

# கியூபா அரசு இலங்கைக்கு தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவுக்கு சபாநாயகர் நன்றி தெரிவித்தார்



**இக்கட்டான சூழ்நிலையில் கியூபா அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இந்த உறவுகள் எதிர்காலத்திலும் பேணப்பட வேண்டும் என வாழ்த்துத் தெரிவிப்பதாகவும் சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கியூபா - இலங்கை பாராளுமன்ற நட்புறவு சங்கத்தைப் புதுப்பிக்கும் நிகழ்விலேயே சபாநாயகர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார். இலங்கைக்கான கியூப தூதுவர் ஜூவானா எலேனா ரெமோஸ் ரொட்ரிகஸ், அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

கொவிட்-19 தொற்றுநோய் காலத்தில் இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய ஹெய்டியில் உள்ள இலங்கைப் பணியாளர்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஐவர் அடங்கிய கியூப மருத்துவக் குழுவை ஹெய்ட்டிக்கு அனுப்பியமை தொடர்பிலும் சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

“கடந்த காலங்களில் கியூப வைத்தியர்கள் இலங்கையின் மருத்துவத் துறைக்கு வழங்கிய பெறுமதியான பங்களிப்பை குறிப்பிட நான் மறந்துவிடக்கூடாது. அவர்கள் அம்பாறை மற்றும் அநுராதபுரத்தில் பல வருடங்கள் பணியாற்றியிருப்பதாக தகவல்கள் காணப்படுவதுடன், 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவ அவர்கள் மீண்டும் முன்வந்தனர். இந்த நட்புறவுச் சங்கம் எங்கள் இரு நாடுகளுக்கும் அதன் மக்களுக்கும் இடையே நிலவும் நீண்டகால நட்பையும், சகோதரத்துவத்தையும் பலப்படுத்தும் என நம்புகின்றேன்” என சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார். ஒன்பதாவது பாராளுமன்றத்தின் கியூப - இலங்கை பாராளுமன்ற நட்புறவு சங்கத்துக்கான புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இதன் தலைவராக பேராசிரியர் திஸ்ஸ விதாரன நியமிக்கப்பட்டிருப்பதுடன், பிரதித் தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் அரவிந்த குமார், வீரசுமன வீரசிங்ஹ மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இதன் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் முஸம்மில் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், பொருளாளராக ஜே.சி.அலவத்துவலவும், துணைச் செயலாளராக கலாநிதி ஹரினி அமரசூரியவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



செய்தி



# 2021ஆம் ஆண்டில் விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தக்கூடாது எனப் பெயரிடப்பட்டுள்ள ஊக்கப் பதார்த்தங்களின் பட்டியல் பாராளுமன்றத்தில்

**உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் 2021ஆம் ஆண்டு பல்வேறு விளையாட்டுக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தடைசெய்யப்பட்டுள்ள ஊக்கமருந்துகள் உள்ளடங்கிய ஊக்கப் பதார்த்தங்களின் பட்டியல் 21ஆம் திகதி பாராளுமன்றத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்படவிருப்பதாக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

விசேடமாக ஒவ்வொரு வருடமும் உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனம் பல்வேறு விளையாட்டுக்களுக்காக தடைசெய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் அடங்கிய பட்டியலை வெளியிடுவதுடன், விளையாட்டு வீரர்கள் தெரிந்தோ அல்லது தெரியாமலோ தமது வினைத்திறனை அதிகரிப்பதற்காக இந்த ஊக்கப் பதார்த்தங்களைப் பயன்படுத்தியிருந்தால் குறித்த போட்டியில் பங்கேற்பதைத் தடுப்பதற்கு அல்லது வேறு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அதன்படி, 2021 ஜனவரி 1 முதல் இந்த ஆண்டு டிசம்பர் 31 வரை செல்லுபடியாகும் தடைசெய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்களின் பட்டியல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி வெளியிடப்பட்டது.


## ஆசிரியர் குழாம்

**ஆலோசனை**

திரு. தம்மிக தஸநாயக்க
*(பாராளுமன்ற செயலாளர் நாயகம்)*

திருமதி. குஷானி ரோஹனதீர
*(பிரதிச் செயலாளர் நாயகம், பணியாட்தொகுதி பிரதானி)*

திரு. டிகிரி கே.ஜயதிலக
*(உதவிச் செயலாளர் நாயகம்)*

**எண்ணக்கரு மற்றும் வழிகாட்டல்**

திரு. ஷான் விஜேதுங்க

**தொகுப்பு**

புத்தினி ராமநாயக்க
எதிரிவீர குணசேகர
நிமமி ஹாத்தியல்தெனிய

**தொகுப்பில் உதவி**

எம்.பிரசாத்
ரிஷ்மியா நூட்டான்

**மொழிபெயர்ப்பு**

எம்.பிரசாத்
ஏ.ஜீ.எம்.எம்.நுஸ்கி
பா.ருத்ரகுமார்

**புகைப்படம்**

நுவன் துமிந்த

**பக்கவடிவமைப்பு**

இஷாரா விக்ரமசிங்ஹ

**இணையம் ஊடாக விநியோகம்**

ஏ.ஜீ.எம்.எம்.நுஸ்கி

# அதிகாரிகள் தகவல்



**திரு எம். யு. எம். வாசிக்**
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) - உறுப்பினர்கள் சேவைத் திணைக்களம்
**நிர்வாகத் திணைக்களம்**

தனது ஆரம்பக் கல்வியை வெலிகம அரபா தேசியப் பாடசாலையில் கற்ற திரு. எம்.யு.எம் வாசிக் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலை இளங்கலை பட்டம் பெற்றவராவார்.

பாராளுமன்ற அதிகாரியாக 1993 இல் பாராளுமன்றத்திற்கு இணைந்துக்கொண்ட திரு. எம்.யு.எம் வாசிக் சபை ஆவண அலுவலகம், சட்டமூல அலுவலகம், ஆலோசனைக்குழு அலுவலகம், உறுப்பினர்கள் சேவைத் திணைக்களம் ஆகியவற்றில் சேவையாற்றியுள்ளார். இவர் 29 வருடகால பாராளுமன்ற சேவைக்காலத்தை கொண்டுள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் அனுபவம் வாய்ந்த அதிகாரியான திரு. எம்.யு.எம் வாசிக் அவர்கள் உறுப்பினர்கள் சேவைத் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக சேவையாற்றி வருகின்றார். சட்டமன்ற செயல்முறை தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிநெறிகளில் கலந்துக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



**திரு.சுதத் பெரேரா**
உதவிப் பணிப்பாளர் (நிர்வாக) செயலாளர் - அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்
**நிர்வாகத் திணைக்களம்**

திரு. சுதத் பெரேரா தனது ஆரம்பக் கல்வியை ராகம படுவத்த கனிஷ்ட கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இயற்பியலில் சிறப்பு பட்டம் பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தில் இயற்பியல் உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

1994 ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்தில் பாராளுமன்ற அதிகாரியாக இணைந்த அவர், தாபன அலுவலகம், இணைப்புப் பெறியியலாளர் திணைக்களம், நிதி மற்றும் கணக்குகள் அலுவலகம், குழு அலுவலகம், உள்ளக கணக்காய்வுப் பிரிவு மற்றும் நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம் ஆகியவற்றில் சேவையாற்றியுள்ளார்.

திரு. சுதத் பெரேரா இலங்கைப் பாராளுமன்றத்தில் அனுபவம் வாய்ந்த அதிகாரி ஆவார். அவர் இந்தியா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளில் சட்டவாக்க செயல்முறை குறித்த பல பயிற்சிநெறிகளில் பங்கேற்றுள்ளார். அவர் தற்போது இலங்கை பாராளுமன்றத்தின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் செயலாளராக உள்ளார்.

பாராளுமன்ற

புகைப்படத் தொகுப்பு

# சபாநாயகர் இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்தினார்

கியூபாவுடன் நட்புறவைப் பலப்படுத்தும்போது...





பலஸ்தீனத்துடன் நட்புறவைப் பலப்படுத்தும்போது...





குவைட்டுடன் நட்புறவைப் பலப்படுத்தும்போது...







ரஷ்யாவுடன் நட்புறவைப் பலப்படுத்தும்போது...





பாராளுமன்ற செய்தி, செய்திமடலில் பங்களிப்புச் செய்வதற்கு உங்களுக்கும் சந்தர்ப்பம் உள்ளது. “பாராளுமன்றம்” என்ற தொனிப்பொருளின் கீழான தலைப்புக்களில் கட்டுரைகளை எழுதுவதற்கான வாய்ப்பு உள்ளது.

sriparliament@gmail.com
தொடர்பு - 0112 777 328


தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே

தொலைபேசி : +94 11 2777100
தொலைநகல் : +94 11 2777227



Parliament of Sri Lanka
@ParliamentLK
@slparliament
Parliament of Sri Lanka